**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | EP. No.<br>EA. No. | | 05/2014<br>10/2025 |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | வசந்தகுமார் | CASTE | : | |
| S/O | ரவி | RELIGION | : | இந்து |
| VILLAGE | சோழவந்தான் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 27 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 11.11.2025**

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் ஐ.டி நிறுவனத்தில் பணிபுரிகிறேன். நான் மற்ற 2 மனுதாரர்களின் சார்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன். நான் பணிபுரியும் அலுவலகம் சோழவந்தானில் உள்ளது. 2ம் எதிர்மனுதாரர் ஆறுமுகத்தம்மாள் எனது தாயாரின் தாயார் ஆவார். 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த அசல் வழக்கை எதற்காக தாக்கல் செய்தார் என்று எனக்குத்தெரியாது, அது வீடு சம்பந்தமான வழக்கு என்று நான் சிறு வயதாக இருந்தபோது தெரிந்துகொண்டேன்.

2. எனது மனுவில் வழக்குச்சொத்தின் சர்வேஎண், விஸ்தீரணம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் சொல்லியுள்ளேன். மேற்படி விவரங்களை மனுவின் எந்த பகுதியில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிடவில்லை. எனது தந்தை பெயர் ரவி, அவர் வாடிப்பட்டி அருகேயுள்ள போடிநாயக்கன்பட்டியை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனது தாய் தந்தையின் திருமணத்தேதி தெரியாது. எனது தாயாரை போடிநாயக்கன்பட்டியில் திருமணம் செய்துக்கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

3. நான் இந்த வழக்கின் மனுக்கள் மற்றும் ஆவணங்களை மனு செய்து நகல் எதுவும் பெறவில்லை. இந்த மனுவை தாக்கல் செய்வதற்கான அசல் வழக்கு மற்றும் நிறைவேற்றும் மனு சம்பந்தமான தகவல்களை எனது தாயார் சொன்னார். எனது தாயாருக்கு எப்போது எப்படி தெரியும் என்று எனக்குத்தெரியாது. இந்த மனுவை எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் ரூபாய் 55,000 த்தை எனது தாயாருக்கு 1ம் எதிர்மனுதாரரான ஆறுமுகம் தராமல் நாங்கள் சிறுவயதிலிருந்து குடியிருக்கும்

வீட்டிலிருந்து அமீனா மூலம் வெளியே போகச்சொல்வதால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

4. மேற்படி தொகைக்காக ம.சா.ஆ.12 தீர்ப்புரையின்படி இந்நீதிமன்றத்தில் எங்களால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 10.03.2017 ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி தள்ளுபடியான வழக்குக்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அசல் வழக்கு எண் 92/2009 ன் தீர்ப்பாணை என்றால் எனக்குத்தெரியாது. நிலுவையில் உள்ள நிறைவேற்று மனு பற்றி 2 மாதங்களுக்குமுன் வழக்கின் வீட்டைப்பற்றி அமீனா சொன்னதாக ஒருவர் விசாரித்தபோது தெரிந்துகொண்டேன்.

5. மேற்படி நபர் பற்றியும் அமீனா பற்றியும் தகவல்களை எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு வீட்டின் விஸ்தீரணம் எனக்குத்தெரியாது. எனது பாட்டி ஆறுமுகத்தம்மாள் நலமாகத்தான் உள்ளார். வழக்கு வீடு 03.01.1992 ல் எனது பாட்டி ஆறுமுகத்தம்மாள் கிரையம் வாங்கிய வீடு என்றால் எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்தை எனது பாட்டி 2006 ல் 1ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றாலும், அந்த பத்திரத்தில் எனது தாயார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்குத்தெரியாது.

6. மேற்படி விவரங்கள் எனது தாயாருக்கு தெரியும் என்றாலும் அவர் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக 2009 ல் அசல் வழக்கு தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆகிவிட்டது என்றாலும் அவர் சாட்சியாக வந்தால் மேற்படி விவரங்கள் நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்பதால் அவர் சாட்சியாக வரவில்லையென்றால் சரியல்ல. எனது பாட்டி 1ம் எதிர்மனுதாராரிடம் வாய்மொழி வாடகைஒப்பந்தம் செய்துவிட்டு இதுநாள் வரை வாடகை தராமல் வழக்கு வீட்டில் குடியிருக்கிறார் என்றால் எனக்குத்தெரியாது.

7. ம.சா.ஆ.12 தீர்ப்புரை மட்டும் தாக்கல் செய்துவிட்டு தீர்ப்பாணையை தாக்கல் செய்தால் எனது தாயாரின் உண்மையான முகவரி தெரிந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யாமல் தவிர்த்துவிட்டோம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்திலும், ம.சா.ஆ.12 வழக்கின் தீர்ப்பாணையையும் தாக்கல் செய்தால் 2006 க்கு முன்னும் அதற்குப்பின் தற்போதுவரை வழக்குவீட்டில் நாங்கள் குடியிருக்கவில்லை என்று தெரியவரும்

என்பதால் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.12 வழக்கின் தீர்ப்பாணை எனது கைவசம் இல்லை. அதை எனது வழக்கறிஞர் மூலமாக நகல் பெற்று தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும்.

8. இந்த அசல் வழக்கில் 1ம் எதிர்மனுதாரருக்கும் எனது பாட்டிக்கும் ஏற்பட்ட வாய்மொழி வாடகை ஒப்பந்தத்தின்படி தாக்கல் செய்யப்பட்டதால் எனது பாட்டி உயிருடன் உள்ளதால் அவர் குடும்பத்தில் உள்ள மற்ற நபர்களையும், எங்களையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்குப்பற்றி எனக்கும் எனது தாயாருக்கும் வழக்கு தாக்கல் செய்த தேதியிருந்தே தெரியும் என்றாலும் வழக்கிற்காக அதை மறுத்துச்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. எனதுதாயாருக்கு 1ம் எதிர்மனுதாரர் எந்தத்தொகையும் தரவேண்டிய அவசியம் இல்லாததால் இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. மனுச்சொத்து எந்தக்காலத்திலும் நாங்கள் அனுபவத்தில் இல்லை என்றாலும் அது எனது தாயார் தாக்கல் செய்த வழக்கை வைத்தும் தெரியவரும் என்றாலும் எனது பாட்டி 1ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம்மூலம் தெரியவரும் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் 2009க்கு பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்பதால் அவற்றால் எனது மனுவை நிரூபணம் செய்யமுடியாது என்றாலும் சரியல்ல.

10. நான் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.